தினமணி

# விவசாயிகள் தேவைதானா?

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 15 Jun 2012 02:53:52 AM IST



ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் பல சாதனைகளில் விவசாயத்துக்கு விவசாயிகள் வேண்டாம் என்ற கொள்கையும் ஒன்று. நிலத்தைவிட்டு விவசாயிகள் வெளியேறும் போக்கு துரித கதியில் நிகழ்ந்து வருகிறது.

இந்தியாவில் தனித்தன்மை வாய்ந்த ஒருவர் விவசாயத் துறைக்கு அமைச்சராக உள்ளார். அவருக்கு விவசாயம் பகுதி நேர வேலை. ஐ.பி.எல்., கிரிக்கெட் இவற்றையெல்லாம் கவனித்ததுபோக நேரமிருந்தால் அறிக்கை விடுவார். வர்த்தகத்துறை அமைச்சருடன் மோதுவதுண்டு.

இந்தியாவில் விதர்பா பகுதி விவசாயிகள்தாம் அதிகம் தற்கொலை செய்து கொள்வதாக ஒரு தகவல் உண்டு. நமது மைய விவசாய அமைச்சரும் விதர்பா பகுதியைச் சேர்ந்தவர் என்பதால் விவசாயிகள் வேண்டாம் என்ற கருத்தில் பிரதமருடன் ஒத்துப் போவது இயல்புதான்.

""பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர் அலகுஉடை நீழ லவர்" என்று எழுதிய வள்ளுவர், ""அன்னத்தை வழங்கி மற்றவர்களின் பசியை ஆற்றும் தருமம் மற்ற எல்லா தருமங்களைவிட உயர்ந்தது" என்று குறளோவியம் படைத்துள்ளார்.

பாகவதத்தில் பகவான் கிருஷ்ணன் நாரதரிடம், விவசாயியை ""அன்னதாதா" என்று போற்றி உலகுக்கு உணவு வழங்கி மக்களின் பசியாற்றும் விவசாயியை நான் வணங்கி வழிபடுகிறேன்..." என்று கூறியுள்ளார்.

அப்படிப் போற்றத்தக்க விவசாயிகள் விதர்பாவில் தற்கொலை செய்துகொண்ட விவரத்தை அண்மையில் ஊடகங்கள் படம்பிடித்துக் காட்டியதை பகவான் கிருஷ்ணரும் பார்க்கவில்லை. திருவள்ளுவரும் பார்க்கவில்லை. நாம் பார்த்து நொந்து பயன் என்ன?

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் மூன்றாண்டு நிறைவு விழா கொண்டாடப்படும் வேளையில் எதை நாம் பாராட்டுவது என்று புரியவில்லை. விவசாயிகளை விரட்டும் பணியைப் பாராட்டுவதா?

பழங்குடி மக்களின் உரிமைகளை நசுக்கி அவர்களை நக்சலைட்டுகளாக மாற்றிய பணியைப் பாராட்டுவதா? நாளுக்கு நாள் நாணயமிழந்து வீழ்ந்துவிட்ட ரூபாய் மதிப்புக்காகப் பாராட்டுவதா? சில்லறை விலைக்கு குறியீட்டெண் மளமளவென்று ஏறி 10.4 சதவிகிதம் தொட்டுள்ளதைப் பாராட்டுவதா?

ஊழலை ஒழிக்கத் தயார் செய்த கொள்ளை அறிக்கைபோல் ஒரு வெள்ளை அறிக்கை வெற்றுக் காகிதத்திற்காகப் பாராட்டுவதா?

இன்றுள்ள எரிசக்தி நெருக்கடிக்கு வழிகாணும் கருவியாக உள்ள கரும்பு எத்தனால் உற்பத்திக்கு முயலாமல் சாராய ஆறுகளை ஓடச் செய்யும் சாதனையைப் பாராட்டுவதா? எதுவுமே புரியவில்லை.

விவசாயிகளை விரட்டுவதில் அல்லது வெளியேற்றுவதில் ஆர்வமாயுள்ள இந்திய ஆளும் வர்க்கம் இன்றைய ஐரோப்பாவைக் கவனிப்பது நல்லது. ஐரோப்பாவை எடுத்துக்கொண்டால் ஸ்பெயின், பிரான்ஸ் நாடுகளில் விவசாய நிலப்பரப்பு அதிகம்.

அதன்பின்னர் ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி தவிர நெதர்லாந்தில் மட்டுமே குறைவான விளைநிலம் உள்ளது.

ஐரோப்பிய விவசாயிகள் சூழலுக்கேற்றபடி வளம்குன்றா வேளாண்மையைக் கடைப்பிடிக்கவும், விளைபொருள்களுக்கு லாபகரமான விலைகளைப் பெறவும் மானியங்களை வழங்கி ஏற்றுமதி செய்வோரும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

ஏற்றுமதிப் பொருள்களுக்குச் சிறப்பு மானியமும் உண்டு. டென்மார்க், நெதர்லாந்து நாடுகளில் பால்வளமும் கால்நடை வளர்ப்பும் அதிகம். பால், வெண்ணெய், பாலாடைக்கட்டி ஏற்றுமதி உண்டு.

ஐரோப்பிய நாடுகளில் பிரான்ஸ், அயர்லாந்து, டென்மார்க், கிரீஸ், ஸ்பெயின், நெதர்லாந்து ஆகியவை வேளாண் ஏற்றுமதி மூலம் கணிசமாக லாபம் பெற்று வருகின்றன.

ஒட்டுமொத்த ஐரோப்பாவில் 1.4 கோடி விவசாயப் பண்ணைகள் உள்ளன. இவற்றில் 1 கோடிப் பண்ணைகள் சிறியவை. அதாவது 1 ஹெக்டேர் அல்லது அதற்கும் குறைவானது.

மொத்த வேளாண்மை உற்பத்தியில் சிறிய பண்ணைகளின் பங்கு 10 சதவிகிதம்.

கடந்த பத்து ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் விவசாயிகளுக்கு அளித்து வரும் சலுகைகள் அளவிடற்கரியது.

ஐரோப்பிய யூனியன் அல்லது யூரோ நாடுகள் இப்போது ஒரு புதிய விவசாய ஒப்பந்தம் செய்யத் திட்டமிட்டுள்ளன. இதன் பெயர் ஐரோப்பிய விவசாயப் பொது உடன்பாட்டுக் கொள்கை. கி.பி. 2014 இல் தொடங்க உள்ளது.

சென்ற ஆண்டு ஐரோப்பியப் பொது உடன்பாட்டின் செலவினம் 60 பில்லியன் யூரோ. இது யூரோ நாடுகளின் மொத்தச் செலவினங்களில் அதாவது யூரோ பட்ஜெட் செலவுகளில் 50 சதவிகிதமாகும்.

இந்தப் பொது உடன்பாட்டின்படி 2014 - 20 களில் 400 பில்லியன் யூரோவாக சுமார் 7 மடங்கு விவசாயச் செலவினங்களை உயர்த்தத் திட்டமிட்டுள்ளன.

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் விவசாயச் செலவினங்களைக் குறைக்கும் போக்கு தென்படுகிறது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் விவசாயிகளின் உற்பத்திச் செலவு முழுவதுமே மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் அவர்கள் செய்யும் உற்பத்தியை நல்ல விலைக்கு விற்று லாபமும் பெற்று மீண்டும் விவசாயத்தில் ஆர்வம் காட்டும் வழியில் விவசாயக் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் டோஹாவில் ஒன்றுகூடிய உலக வர்த்தக நிறுவன மாநாட்டில் வளர்ச்சியுற்ற நாடுகளில் விவசாய மானியத்தைக் குறைக்கும்படி வற்புறுத்தப்பட்டபோது, அமெரிக்க - ஐரோப்பியப் பிரதிநிதிகள் ""நாங்கள் விவசாயிகளுக்கு வழங்கும் மானியங்கள் குறைவுதான்.

இன்னமும் கூடுதலாக்கத் திட்டமிட்டுள்ளோம். ஆகவே உலக வர்த்தக அமைப்பின் கோரிக்கையை ஏற்பதற்கில்லை'' என்று கூறி அந்த மசோதா தோற்கடிக்கப்பட்டது.

அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் விவசாயம் தேவை. ""எங்களுக்கு விவசாயம் வேண்டும்'' என்று கோஷம் போடும்போது, இந்தியா மட்டும் ""எங்களுக்கு விவசாயிகள் தேவையில்லை'' என்று சொல்லாமல் சொல்லி விவசாயிகளின் தற்கொலைகளை ஊக்குவிப்பது ஏன்?

தேச வளர்ச்சிக்கு விவசாயிகளின் பங்கே தேவையில்லை என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டு விட்டோமா?

# குறைந்துவரும் வீராணம் ஏரி நீர்மட்டம்: விவசாயிகள் கவலை

-ஜி.சுந்தரராஜன் -

First Published : 15 Jun 2012 02:20:35 AM IST



காட்டுமன்னார்கோயில் அருகே உள்ள வீராணம் ஏரியின் தோற்றம் (கோப்பு படம்).

சிதம்பரம், ஜூன் 14: மேட்டூரிலிருந்து நீர் திறந்துவிடப்படாததால் கடலூர் மாவட்டம் வீராணம் ஏரியின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. இதனால் சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் தாலுக்கா விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

÷கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரியின் மொத்தக் கொள்ளளவு 47.50 அடியாகும் (1465 மில்லியன் கனஅடி). ஆனால் ஏரியில் தற்போது வியாழக்கிழமை நிலவரப்படி 41.90 அடிதான் (327 மில்லியன் கனஅடி) நீர் உள்ளது.

சென்னை குடிநீருக்கு விநாடிக்கு 38 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. ஏரியின் நீர்மட்டம் 40 அடிக்கும் கீழ் குறைந்தால், நீரேற்றி அனுப்ப முடியாததால் சென்னை குடிநீர் அனுப்புவது நிறுத்தப்படும் நிலை ஏற்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

÷கடந்த ஜூன் 6-ம் தேதி மேட்டூரில் நீர் திறந்துவிடப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் இந்த ஆண்டு இன்று வரை மேட்டூரிலிருந்து நீர் திறந்துவிடப் படாததால் காவிரி டெல்டா கடைமடை பகுதியான கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

÷இதுகுறித்து தமிழக உழவர் முன்னணி மாவட்டச் செயலாளர் சி.ஆறுமுகம் தெரிவித்தது: கடும் மின்வெட்டு, நீர் பற்றாக்குறையால் சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் தாலுக்காக்களில் குறுவை சாகுபடி செய்ய முடியாமல் போனது.

இப்போது கடந்த ஆண்டை போல இந்த ஆண்டும் முன்கூட்டியே நீர் திறந்துவிட்டால் சம்பா சாகுபடி பணிகளை மேற்கொள்ளலாம் என விவசாயிகள் இருந்தனர். ஆனால் இதுநாள் வரை தண்ணீர் திறக்கப்படவில்லை. மின்சப்ளை இருந்தால் போர்வெல் மூலம் முன்கூட்டியே விதை

விடும் பணியை தொடங்கலாம். மின்வெட்டு, நீர் இல்லாததால் தற்போது சம்பா சாகுபடியும் கேள்விக்குறியாகிவிட்டது என வேதனையுடன் தெரிவித்தார்.

## முட்டை விலை

First Published : 14 Jun 2012 12:16:07 PM IST

நாமக்கல், ஜூன் 13: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.04, சென்னையில்

ரூ. 3.08.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்

முதல் விலை கிலோ ரூ.76, முட்டைக் கோழி கிலோ

ரூ.48.

## விதை முளைப்புத் திறனை அறிய பரிசோதனை

First Published : 14 Jun 2012 11:10:55 AM IST

திருவள்ளூர், ஜூன் 13: விதை முளைப்புத் திறனை அறிய விதை பரிசோதனை மேற்கொள்ளப்படும் என விதைப் பரிசோதனை ஆய்வக அலுவலர் முத்துப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

÷அவரது அறிக்கை: தரமான விதைகள் மற்றும் அதிக மகசூல் பெற விதையின் முளைப்புத் திறனை சோதனை செய்து விவசாயிகள் அறிந்து கொள்ளலாம்.

÷விதைகள் குறிப்பிட்ட கணக்கெடுப்பு நாளில் வரையறுக்கப்பட்ட முளைப்புத் திறனை அடைந்தால் மட்டுமே, அவை தரமான விதைகள் என சான்றளிக்கப்படுகிறது.

÷வரையறுக்கப்பட்ட முளைப்புத் திறனும், கணக்கெடுப்பு நாளும் பயிருக்குப் பயிர் மாறுபடும். பயிரின் முளைப்புத் திறனை வைத்துதான் ஒரு ஹெக்டேர் மகசூல் கணக்கிடப்படுகிறது.

÷எனவே பயிரின் முளைப்புத் திறனை விதைப் பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

÷பயிர், கணக்கெடுப்பு நாள், முளைப்புத் திறன் (சதவீதம்): நெல், 14, 80, சோளம் 10, 75, மக்காசோளம் 7, 90, கம்பு 7, 75, உளுந்து 7, 75, காராமணி 8, 75, பாசிப்பயறு 8, 75, அவரை 10,

75, பீன்ஸ் 9, 75, நிலக்கடலை 10, 70, எள் 6, 80, கத்தரி 14, 70, மிளகாய் 14, 60, தக்காளி 14, 70, கீரை 8, 70, பாகற்காய் 14, 60, புடலை 14, 60.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## நெல்லுக்கு ஆதரவு விலை ரூ.1,250 ஆக உயர்வு

ஜூன் 15,2012,01:02



புதுடில்லி: மத்திய அரசு, வரும் 2012-13ம் பயிர் பருவத்தில் (ஜூலை-ஜூன்), நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு 170 ரூபாய் உயர்த்தி, 1,080 ரூபாயில் இருந்து 1,250 ரூபாயாக அதிகரித்துள்ளது.

அமைச்சரவை குழுடெல்லியில் நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவையின் பொருளாதார விவகாரங்களுக்கான குழு கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு பின்னர், மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஒரு குவிண்டால் உயர்ரக நெல்லுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை, 1,110 ரூபாயில் இருந்து 1,280 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு குவிண்டால் உளுந்து விலை, 30 சதவீதம் அதிகரிக்கப்பட்டு, 3,300 ரூபாயில் இருந்து 4,300 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. துவரை மற்றும் கடலை பருப்பு விலை குறித்த முடிவு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்களில், ஒரு குவிண்டால்

கருப்பு மற்றும் மஞ்சள் சோயாவிற்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, தலா 550 ரூபாய் உயர்த்தப்பட்டு, முறையே 2,200 மற்றும் 2,240 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு குவிண்டால் கடலை விலை 37 சதவீதம் உயர்த்தப்பட்டு, 2,700 ரூபாயில் இருந்து 3,700 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நடுத்தரம் மற்றும் நீள்வகை பருத்தியின் குறைந்தபட்ச ஆதரவு விலை 28 சதவீதம் உயர்த்தப்பட்டு முறையே 3,600 மற்றும் 3,900 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
அது போன்று சூரியகாந்தி விதை, எள், சோளம், கம்பு உள்ளிட்டவற்றின் குறைந்தபட்ச ஆதரவு விலையும் உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

எண்ணெய் வித்துக்கள் : பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்களின் குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த வேண்டும் என வேளாண் செலவினம் மற்றும் விலைகள் ஆணையம் மத்திய அரசுக்கு பரிந்துரைத்திருந்தது. அதன் அடிப்படையில் தற்போது வேளாண்பொருட்களின் குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் வேளாண் தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, உற்பத்தி பெருகும் என்பதுடன் இவற்றின் இறக்குமதியும் குறையும்.

**யூரியா விலை உயர்வு ஒத்திவைப்பு**

ஜூன் 15,2012,01:01




புதுடில்லி: யூரியா உரத்தின் விலையை, 10 சதவீதம் உயர்த்த வேண்டும் என்ற உரத்துறை அமைச்சகத்தின் பரிந்துரையை, பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு ஒத்தி வைத்துள்ளது. மத்திய அரசு, நிர்ணயித்த விலையில் யூரியா உரம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஏற்படும் இழப்பு, உர தயாரிப்பு நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. சென்ற 2011-12ம் நிதியாண்டில், உர மானியத்திற்கான தொகை, 24 ஆயிரத்து 500 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
மத்திய அரசின், மானிய சுமையை குறைக்கும் வகையில், தற்போது, ஒரு டன் 5,310 ரூபாயாக

உள்ள யூரியாவின் விலையை, 10 சதவீதம் அதிகரித்து, 5,841 ரூபாயாக உயர்த்த வேண்டும் என, உர அமைச்சகம் கேட்டுக் கொண்டது. தற்போது, இந்த விலை உயர்வு தொடர்பான முடிவு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது, நாட்டில், யூரியா உரத்திற்கான தேவை ஆண்டுக்கு, 2 கோடியே 80 லட்சம் டன்னாக உள்ளது. இதில், 2 கோடியே 20 லட்சம் டன் யூரியா உரம் உள்நாட்டில் உற்பத்தியாகிறது. இறக்குமதி வாயிலாக, பற்றாக்குறை (60 லட்சம் டன்) பூர்த்தி செய்து கொள்ளப்படுகிறது.

## அட்மா திட்டத்தின் கீழ் நெல்சாகுபடி விளக்கம்

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2012,05:10 IST

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வட்டார அட்மா திட்டத்தின் கீழ், கப்பலூத்து கிராமத்தில், பண்ணைப்பள்ளி முகாம் நடந்தது.
வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) வசுமதி தலைமை வகித்தார். முகாமில், திருந்திய நெல் சாகுபடியில் களையெடுக்கும் கருவி, கோனோவீடர் மற்றும் இலை வண்ண அட்டை மூலம் உரமிடுதல் குறித்து வயல் வெளியில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
துணை வேளாண் அலுவலர் ராஜேந்திரன், வட்டார தொழில் நுட்ப மேலாளர் சந்திரசேகரன், தொழில்நுட்ப வல்லுனர்கள் தீபா, திவ்யா உட்பட பலர் பங்கேற்றனர்.

## சிறு விவசாயிகளுக்கு50 சதவீதம் மானியம்

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2012,01:11 IST

தேனி:சிறு விவசாயிகள் பயனடையும் வகையில், பந்தல் காய்கறிகளான புடலை, பாகற்காய், பீர்க்கங்காய்,கோவைக்காய் சாகுபடிக்கு 50 சதவீதம் மானியம் அறிவிக்கப்பட்டுள்ளது.
தமிழகத்தில் பல்லாயிரம் ஏக்கரில் பந்தல் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயிகளை ஊக்கப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. விவசாயிகளுக்கு பந்தல் அமைக்கவும், வீரிய ஒட்டுரக காய்கறி விதைகளை வழங்கவும் 50 சதவீத மானியம் வழங்கப்பட உள்ளது. விருப்பமுள்ள விவசாயிகள், பாஸ்போர்ட் அளவு போட்டோ, சிட்டா அடங்கல் ஆகியவற்றுடன் சென்று, ட்டக்கலைத்துறை அலுவலகத்தில் விபரங்கள் பெற்று விண்ணப்பிக்கலாம், என தெரிவிக்க பட்டுள்ளது.

தினகரன்

## ஒட்டுரக முருங்கை விலை கிடுகிடு

பதிவு செய்த நேரம்:2012-06-14 14:00:33

செம்பட்டி: சின்னாளபட்டி பகுதியில் விளைச்சல் குறைவால், ஒட்டுரக முருங்கை விலை உயர்ந்துள்ளது.

சின்னாளபட்டி, கலிக்கம்பட்டி, செட்டியபட்டி, ஜாதிகவுண்டன்பட்டி, நடுப்பட்டி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஒட்டுரக முருங்கை விவசாயம் நடக்கிறது. வெங்காயம், தக்காளி, கத்தரி பயிர்களுக்கு இடையே ஊடுபயிராக முருங்கை பயிரிடப்படுகிறது. நான்கு மாதத்தில் ஒட்டுரக முருங்கை விவசாயத்தில் பலன் கிடைக்கிறது.

ஒரு மரத்தில் 200 முதல் 3000 காய்கள் வரை காய்க்க வேண்டும். ஆனால், இந்தாண்டு எதிர்பார்த்த அளவில் ஒட்டுரக முருங்கை விளைச்சல் இல்லை. ஒரு கிலோ முருங்கை ரூ12க்கு விற்கப்பட்டு வந்தது. வரத்து குறைவால், தற்போது கிலோ ரூ.15க்கு விற்கப்படுகிறது.

சின்னாளபட்டி பகுதியில் இருந்து திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் காய்கனி மார்க்கெட்டிற்கு ஒட்டுரக முருங்கை அனுப்பப்படுகிறது. இதுதவிர, சென்னை, பெங்களூர் உள்ளிட்ட நகரங்களுக்கும் முருங்கை செல்கிறது. விளைச்சல் குறைந்தபோதும், விலை உயர்வு காரணமாக விவசாயிகள் உற்சாகம டைந்துள்ளனர்.